# RK TUITION CENTRE – KUMBAKONAM

| பத்தாம் வகுப்பு தமிழ் | தேர்வு – 2 | மதிப்பெண் : 50<br>நேரம் : |
|---|---|---|

## பகுதி – 1

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **7 X 1 = 7**

1. 'பாடுஇமிழ் பனிக்கடல் பகுதி' என்னும்முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
   (அ) கடல்நீர் ஆவியாதல் (ஆ) கடல் நீர் குளிர்ச்சியாதல்
   (இ) கடல்நீர் ஒலித்தல் (ஈ) கடல்நீர் கொந்தளித்தல்
2. பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க.
   (அ) கொண்டல் - 1. மேற்கு
   (ஆ) கோடை - 2. தெற்கு
   (இ) வாடை - 3. கிழக்கு
   (ஈ) தென்றல் - 4. வடக்கு
   (அ) 1,2,3,4 (ஆ) 3,1,4,2 (இ) 4,3,2,1 (ஈ) 4,3,1,2
3. "உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்
   உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்" –பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை?
   (அ) உருவகம், எதுகை (ஆ) மோனை, எதுகை (இ) முரண், இயைபு (ஈ)உவமை,எதுகை
4. தொகைநிலைத் தொடர்களின் வகைகள் எத்தனை?
   (அ) ஐந்து (ஆ) ஆறு (இ) எட்டு (ஈ) பத்து
5. **'பெரிய மீசை'** சிரித்தார் இச்சொல்லுக்கான தொகையின் வகை எது?
   (அ) பண்புத்தொகை (ஆ) உவமைத் தொகை (இ)அன்மொழிதொகை(ஈ)உம்மைத்தொகை

   **பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடைதருக.**

   "மகரந்தத் தூளைச் சுமந்துகொண்டு, மனத்தை
   மயலுறுத்து கின்ற இனிய வாசனையுடன் வா
   இலைகளின்மீதும் நீரலைகளின் மீதும் உராய்ந்து மிகுந்த
   ப்ராண-ரஸத்தை எங்களுக்குக் கொடு"
6. இப்பாடலின் ஆசிரியர் யார்?
   (அ) பாரதியார் (ஆ) பாரதிதாசன் (இ) சுரதா (ஈ) கம்பர்
7. இப்பாடலில் வரும் **'ப்ராண'** என்பதன் பொருள்?
   (அ) காற்று (ஆ) நிலம் (இ) உடல் (ஈ) உயிர்

www.Padasalai.Net

## பகுதி – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வேண்டும்.** **2 X 2 = 4**
**(10வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)**

8. வசன கவிதை – குறிப்பு வரைக.
9. 'நமக்கு உயிர் காற்று
   காற்று வரம் மரம் - மரங்கள்
   வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம் - இதுபோன்ற உலகக் காற்றுநாள் விழிப்புணர்வுக்கான முழக்கத் தொடர்கள் இரண்டினை எழுதுக.
10. **'சிறுதாம்பு தொடுத்த'** எனத் தொடங்கும் முல்லைப் பாட்டுப் பாடலை எழுதுக.

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வேண்டும்.** **2 X 2 = 4**

11. தண்ணீர்க்குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைச் சொற்களை விரித்து எழுதுக. தொடரில் அமைக்க.
12. தொகைநிலைத் தொடர் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
13. மாஅல் - பொருளும் இலக்கணக் குறிப்பும் தருக.

## பகுதி – 3

**எவையேனும் ஒரு வினாவிற்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.** **1 X 3 = 3**

14. சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வது போல் ஓர் உரையாடல் அமைக்க.
15. விரிச்சி கேட்டல் நிகழ்வை முல்லைப் பாட்டின் வழி விளக்குக.

காந்திபார்க் பின்புறம், கும்பகோணம்
(டவுன் ஹைஸ்கூல் அருகில்)
Cell : 97914 50513 / 93452 17112
R. Karthi M.Sc.B.Ed.

# RK TUITION CENTRE – KUMBAKONAM

**எவையேனும் ஒரு வினாவிற்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.** **1 X 3 = 3**

16. உயிராக நான், பல பெயர்களில் நான், நான்கு திசையிலும் நான், இலக்கியத்தில் நான், முந்நீர் நாவாய் ஓட்டியாக நான்.... முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப் பற்றி பேசுகிறது. இவ்வாறு 'நீர்' தன்னைப் பற்றிப் பேசினால் உங்களுடைய கற்பனையின் தலைப்புகளை எழுதுக.
17. 'நான்கு திசைகளில் நான்' எனக் காற்றும் கூறுவனவற்றை எழுதுக.

**எவையேனும் ஒரு வினாவிற்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.** **1 X 3 = 3**

18. தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும் வழியில் ஆடுமாடுகளுக்கு தண்ணீர் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவர் கவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள் - இப்பத்தியிலுள்ள தொகைச் சொற்களின் வகைகளைக் குறிப்பிட்டு விரித்து எழுதுக.
19. பண்புத்தொகையின் வகைகளைச் சுட்டி விளக்குக.

**பகுதி – 4**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க.** **2 X 4 = 8**

20. மொழிபெயர்க்க.
The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start witting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flower's fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.
21. **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



22. வசன நடையில் எழுதுக.
சிறியதானியம் போன்ற மூக்கு, சின்னக்கண்கள், சின்னத்தலை; வெள்ளைக் கழுத்து; அழகிய மங்கல் வெண்மை நிறமுடைய பட்டுப்போர்த்த வயிறு; கருமையும் வெண்மையும் கலந்த சாம்பல் நிறத்தலாகிய பட்டுப்போர்த்த முதுகு, சிறிய தோகை; துளித்துளிக் கால்கள்; இத்தனையும் சேர்த்து ஒரு பச்சைக் குழந்தையின் கைப்பிடியிலே பிடித்து விடலாம். இவ்விதமான உடலைச் சுமந்து கொண்டு என் வீட்டிலே இரண்டு உயிர்கள் வாழ்கின்றன. அவற்றில் ஒன்று ஆண் மற்றொன்று பெண்.
- இது போன்று உங்களுக்குப் பிடித்த ஏதேனும் ஒன்றைப் பற்றி வசனநடையில் எழுதுக.

**பகுதி – 5**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **3 X 6 = 18**

23. காற்று என்னவெல்லாம் இருப்பதாக காற்று கூறுகிறது விவரித்து எழுதுக.
24. புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?
25. மாநில அளவில் நடைபெற்ற "மரம் இயற்கையின் வரம்" என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

காந்திபார்க் பின்புறம், கும்பகோணம்
(டவுன் ஹைஸ்கூல் அருகில்)
Cell : 97914 50513 / 93452 17112
R. Karthi M.Sc.B.Ed.